செ.வெ.எண்.289 நாள்.11.10.2021

**காஞ்சிபுரம் மாவட்டம், வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்**

காஞ்சிபுரம் மாவட்டம், வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்கள், அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வலர்கள், தனியார் மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று (11.10.2021) மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :**

அனைத்து தன்னார்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் (NGOs) உறுப்பினர்களின் பெயர்கள், அலைபேசி எண்கள் ஆகிய விவரங்களை மாநில மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மை இணையதளத்தில் (https://www.tnsmart.tnsdma.tn.gov.in) பதிவேற்றம் செய்ய வேண்டும் என்றும், இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாத மற்றும் விருப்பமுள்ள தன்னார்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் உறுப்பினர்களை இப்பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இடர்பாடுகளின் போது தன்னார்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் உறுப்பினர்கள் செய்ய வேண்டிய பணிகள், கடமைகள் என்னென்ன என்பது குறித்தும், முதலில் உதவி செய்பவர்கள் (First Responders) பயிற்சியினை அவர்களுக்கு முன்கூட்டியே அளிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தினை பொறுத்தவரை 126 இடங்கள் மிக அதிகமாக பாதிக்கப்படக்கூடிய இடங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்விடங்கள் பற்றிய விவரங்கள் தன்னார்வலர்கள் மற்றும் அரசுசாரா நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழையின் போது மீட்புபணிகள் உள்ளிட்டவைகளை மேற்கொள்ளும் பொருட்டு 21 மண்டல குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, இம்மண்டல குழுக்களில் 11 துறைகளை சார்ந்த அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். எனவே, தன்னார்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் இக்குழுக்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மிக அதிகமாக பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மூத்த குடிமக்கள், கருவுற்ற தாய்மார்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோர் விவரங்களை முன்கூட்டியே பட்டியலிட்டு, மழை பொழிவின் போது அவர்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்கு அழைத்து வந்து தங்க வைக்க தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும், அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் பாதுகாப்பு வசதிகளை முன்கூட்டியே ஆய்வு செய்து உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அவசரத் தேவைக்கான மருந்துகள், உயிர்காக்கும் மருந்துகள் உள்ளிட்டவைகளும், கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகள் உள்ளிட்ட பொருட்களையும், பெட்ரோல் டீசல் உள்ளிட்ட எரிபொருட்களையும் முன்கூட்டியே கொள்முதல் செய்து வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், மொபைல் நிறுவனங்களில் உயர்கோபுரங்கள், தகவல் தொழில் நுட்பங்கள் ஆகியவை செயல்படும் நிலையில் உள்ளதா என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும் என்று சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள அனைத்து துறை அலுவலர்கள், தன்னார்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.**